1972 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கா. காளிமுத்து : தற்பொழுது அதனை கேரளாவைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. தமிழகத்தில் உள்ளவர்கள் பயன்படுத்தும் அளவுக்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கேரளத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் எதுவும் குறிப்பில் இருக்கவில்லை. அதிலே ஃப்ரோஸன் அறைகள் என்றும், தட்டுகளின் மூலமாக மீன்களை உறையவைப்பது என்றும் ஆக இரண்டு முறைகள் இருக்கின்றன. அறைகளில் நீண்ட காலத்திற்கு மீன்களைச் சேமித்து வைக்கிறார்கள். தட்டுகளில் குறைந்த காலத்திற்கு வைத்து விற்கின்றார்கள். பெட்டிகளில் வைத்துக்கொள்வதற்கு அப்படிப்பட்ட சிலர்களுக்கு அது வாடகைக்கு விடப்படுகிறது. முற்றிலும் கேரளத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் விடப்படுகிறது என்ற விவரம் தற்பொழுது என்னிடம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : நார்விஜியர்கள் நம்முடைய மாநிலத்தில் எங்கே என்ன வகையான மீன்கள் கிடைக்கும் என்று கண்டுபிடித்துச் சொல்வதற்குத்தான் வந்திருக்கிறார்களா ? அல்லது அவர்களே நேரில் மீன்களைப் பிடித்து வியாபாரம் செய்யக்கூடிய அளவுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர்கள் நமது மாநிலத்தில் எங்கே மீன்கள் கிடைக்கின்றன, மீன்களை எப்படிப் பிடிப்பது, பிடித்து எப்படி உறைய வைப்பது, அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய எப்படிப் பதப்படுத்தி வைப்பது, மீன்களிலிருந்து பிஷ் மீல் எப்படித் தயாரிப்பது ஆகிய இப்படிப்பட்ட பல திட்டங்களுக்காகத்தான் அவர்கள் நமது நாட்டில் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் பிடிக்கப்படுகின்ற மீன்கள்தான் அயல் நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் அயல் நாடுகளுக்கு மீன்களை அனுப்பவில்லை.

## *Salem Steel Plant*

* 41 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Dastur and Company, the Consultants for the Salem Steel Plant have submitted the detailed report; and

(*b*) if not, the reasons for the delay?

**மாண்புமிகு** திரு. செ. **மாதவன்:** (அ) சேலம் உருக்காலை ஆலோசனைப் பொறியாளர்களான தஸ்தூர் கம்பெனியார் மத்திய அரசுக்குத் தொழில் நுணுக்கப் பொருளாதார விவர அறிக்கை ஒன்றை 1971 நவம்பரில் சமர்ப்பித்துள்ளனர்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** அதில் உள்ள முக்கியமான சிபார்சுகள் என்ன என்பதைச் சர்க்கார் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு** திரு. செ. **மாதவன்:** சிபார்சுகள் என்பது மட்டுமல்ல, சேலம் தொழிற்சாலையில் எந்த பிராடக்ட் மிக்ஸை உற்பத்தி செய்தால் லாபத்தோடு நடத்த முடியும் என்பது போன்ற விவரங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இவைகளெல்லாம் மத்திய அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன.

திரு. என். கே. பழனிசாமி: சமீபத்தில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சாதனங்களைச் செய்வதற்கு உத்தேசம் இருக்கிறதா. அப்படியானால் எப்படிச் செய்ய உத்தேசம்?

**மாண்புமிகு** திரு. **செ. மாதவன்:** முதல் கட்டமாக ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் உற்பத்தி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. அது எப்படி என்ற விவரம் என்னிடம் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தஸ்தூர் அறிக்கையை அப்படியே மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதா, அல்லது வேறு ஒரு அறிக்கை தயார் செய்து கொண்டிருக்கிறதா? சேலம் இரும்பு ஆலை உற்பத்தியைத் தொடங்குவதற்கு வரமுடியாத அளவுக்கு எந்த விதமான வேலையும் ஆரம்பிக்காமல் தாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அரசு தெரிவிக்குமா?

**மாண்புமிகு** திரு. செ. **மாதவன்:** தாமதம் எதுவும் இல்லை என்று அடிக்கடி மத்திய அரசு சொல்லி வந்திருக்கிறது. தஸ்தூர் அறிக்கையைப் பொறுத்த அளவுக்கு ப்ராடக்ட் மிக்ஸைக் குறித்து வேறுபட்ட கருத்துக்கள் இருந்தன. என்ன பிராடக்ட் மிக்ஸை நாம் சேலம் இரும்பு ஆலையில் கொண்டுவந்தால் லாபமாக நடத்த முடியும் என்று அவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர வேறு காலதாமதம் இருப்பதாகத் தெரியவில்லை.

*42 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் உருக்காலை திட்டத்திற்காகத் தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு இதுவரை எத்தனை ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது?